# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.317/மா/2023

நாள். 26.12.2023

திரு.மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 02.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2023 அன்று பெறப்பட்டு, 317/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 02.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சியில் மொத்த மண்டலங்கள் 5ம், வார்டு எண்ணிக்கை 100ம் ஆகும். இதில் ஆயிரக்கணக்கான மாடுகள், தெருக்களிலும், மெயின்ரோடுகளிலும் சுற்றி திரிகிறது. சுற்றித்திரியும் மாடுகளை உரிமையாளர்கள் தொழுவத்தில் அடைத்து வைப்பது கிடையாது. மாடுகளை வெளியில் விடுவதால், மாடுகள் சாலையில் திரிவதால் ஒரு சில சமயங்களில் சில மாடுகள் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை நடந்து செல்லும்போது முட்டி விடுகிறது. இதனால் சில நபர்கள் உயிர் இழக்கவும் நேரிடுகிறது. மேலும் இரு சக்கரவாகனங்களில் செல்பவர்களையும் இடித்து தள்ளிவிடுவதால் விபத்துக்களும் ஏற்பட்டு வருகிறது. எனவே தெருக்களிலும் சாலைகளிலும் அனாதையாக சுற்றித்திரியும் மாடுகளை 100 வார்டுகளிலும் கண்காணித்தும் அம்மாடுகளை சிறைபிடித்து கொண்டி தொழுவத்தில் அடைத்துவைத்து மாட்டின்

உரிமையாளர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக ரூ.5000 முதல் ரூ.10000 வரை அபராதம் விதித்தும் அபராத தொகையை செலுத்த தவறினால், மாடுகளை பொது ஏலத்தில் விட்டு, தொகை பெற்றுக்கொண்டும் மேலும் மாட்டின் உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டும் இம்மாடுகளை கண்காணிக்க மதுரை மாநகராட்சியால் ஒரு குழு அமைத்து முறையாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், இதுநாள் வரையிலும், மாடுகளை தெருவில் வராமல் கட்டுப்படுத்தத்தவறிய உரிய, சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளார்."

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) மதுரை மாநகராட்சி, மாநகர நல அலுவலர் தனது 02.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" மதுரை மாநகராட்சியில் 5 மண்டலம், 100 வார்டு பகுதிகளில் கால்நடை மருத்துவ அலுவலர், மண்டல சுகாதார அலுவலர் மற்றும் வார்டு சுகாதார ஆய்வாளர்களை கொண்டு மண்டல வாரியாக குழு நியமித்து ATP பட்டியல் பிரகாரம் மாடுகளை மாநகராட்சி பயிற்சி பெற்ற தூய்மை பணியாளர்களை கொண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தெருக்களில் கொண்டியாய் திரியும் மாடுகளை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களைகொண்டு பிடித்து அதற்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தில் கொண்டு சென்று மதுரை மாநகராட்சி தொழுவத்தில் அடைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

மதுரை மாநகராட்சியால் மேற்கண்ட பணிகள் தடுப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் மாட்டின் உரிமையாளருக்கு உரிய அபராதம் விதிப்பு செய்திடவும், மற்றும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.**

**6) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

" மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள மாடுகள் தெருக்களிலும் மெயின் ரோடுகளிலும் சுற்றித்திரிகிறது. மேலும் எனது விளாங்குடி 1–வது வார்டில் நூற்றுக்கணக்கான மாடுகள் சாலையில் திரிந்து வருகின்றன. இம்மாடுகளை உரிமையாளர்கள்

உரிய தொழுவத்தில் கட்டிவைப்பது கிடையாது. இதனால் மாடுகள் திரியும்போது அவை எதிர்பாராதவிதமாக பொதுமக்களை முட்டி விடுகின்றன. இதனால் சிலருக்கு காயம் ஏற்படுகிறது. உயிரிழப்பும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் இரண்டு சக்கர வாகனங்களில் வருபவர்களையும் மாடுகள் முட்டிவிடுவதால் வாகன விபத்தும் ஏற்பட்டு வருகிறது.

எனவே, தெருக்களிலும் சாலைகளிலும் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து அதற்கான மாநகராட்சி கொட்டகையில் அடைத்திடவும், பிடிக்கப்பட்ட மாடுகளின் உரிமையாளர்களின் மீது அபராதம் விதித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7)மதுரை மாநகராட்சி கால்நடை மருத்துவ அலுவலர் 18.12.2023 அன்றைய நேரடி விசாணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்: அதில்**

" மனுதாரரின் மனுவின்படி மதுரை மாநகரில் சுற்றித்திரியும் மாடுகளால் ஏற்படும் இன்னல்கள் தவிர்க்க, மதுரை மாநகராட்சி தினசரி அடிப்படையில் அவசரகால குழு அமைத்து மாடுகளை பிடித்து மாட்டு உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆவணங்களை சமர்ப்பித்து அதனையே இம்மன்ற வழக்கின் பதிவாக ஏற்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 02.11.2023 அனுப்பப்பட்ட கடிதத்தினை எனது வாக்குமூலமாக சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**8 ) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மாநகர் நல அலுவலரின் அறிக்கை மற்றும் கால்நடை மருத்துவ அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள மாடுகள் தெருக்களிலும், மெயின் ரோடுகளிலும் சுற்றித்திரிகிறது என்றும், மேலும் தனது வார்டில் நூற்றுக்கணக்கான மாடுகள் சாலையில் திரிந்து வருவதால் அவை பொதுமக்களை முட்டி விடுவ்தாகவும், இத்தகைய சுற்றித்திரியும் மாடுகளால் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் விபத்தில் சிக்கிகொள்கிறார்கள் என்றும் எனவே சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த மதுரை மாநகராட்சிக்கு உத்தரவிட கோரியும், சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சியில் 5 மண்டலம், 100 வார்டு பகுதிகளில் கால்நடை மருத்துவ அலுவலர், மண்டல சுகாதார அலுவலர் மற்றும் வார்டு சுகாதார ஆய்வாளர்களை கொண்டு மண்டல வாரியாக குழு நியமித்து ATP பட்டியல் பிரகாரம் மாடுகளை மாநகராட்சி பயிற்சி பெற்ற தூய்மை பணியாளர்களைக் கொண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், சுற்றித்திரியும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்தும், எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கியும், கொண்டியாய் திரியும் மாடுகளை பிடித்து மதுரை மாநகராட்சி தொழுவத்தில் அடைக்கப்படுவதாகவும், இது குறித்து பணியாளர்களுக்கு உரிய உத்தரவிடப்பட்டுள்ளது என்றும்,

மதுரை மாநகராட்சி மாநகர நல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும் இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை 562 மாடுகள் பிடிக்கப்பட்டு அபராதத்தொகையாக ரூ.8,97,500/– வசூலிக்கப்பட்டுள்ளதாக கால் நடை மருத்துவ அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

Tamil Nadu Local Bodies Act 2023ல் பிரிவு 106 –ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) No person shall milk or cause or permit to be milked any cow or buffalo of other animal in any public street or place.
(2) No person shall allow any animal to be strayed in any public street or public place.
(3) Notwithstanding anything contained in any other law for the time being in force the Commissioner may cause to remove and impound any animal being milked or any animal found straying in any public street or other public place in accordance with such rules as may be prescribed.

இருப்பினும், மதுரை மாநகராட்சி கள அலுவலர்கள் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்திட இன்னும் தீவிர நடவடிக்கை எடுத்து பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு எவ்வித இடையூறு இல்லாமல் சாலையில் அச்சமின்றி பாதுகாப்பாக செல்ல உறுதி செய்திடவும் அதனை முறையாக மாநகர நல அலுவலர் தலைமையில் காலமுறை கூட்டம் நடத்தி அவ்வப்போது முறையாக கண்காணிக்கவும், மேற்கண்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கவும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி,
த/பெ. திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் நகர்,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை.

3) மாநகர் நல அலுவலர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை. (மதுரை மாநகராட்சி ஆணையர் வழியாக)

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்